இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 302 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 29 – வியாழக்கிழமை 12 ஜுன் 2025 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 302 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 29 - Thursday 12 June 2025 - Dak 16 Pages ₹ 5.00

## ஒன்றிய அரசின் மூன்று வேளாண் சட்டங்களை ஆதரித்து விவசாயிகளுக்கு அ.தி.மு.க. துரோகம்!

# வேளாண் துறையில் மேலும் சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றுவோம்!

## ஈரோட்டில் கண்காட்சியைத் தொடங்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**ஈரோடு, ஜுன் 12 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.6.2025) ஈரோடு மாவட்டம், பெருந்துறை, விஜயமங்கலம் சுங்கச்சாவடி அருகில் வேளாண்மை – உழவர் நலத் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தை தொடங்கி வைத்து, முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி ஆற்றிய உரை வருமாறு:-**

டெல்டா பாசனத்திற்கான தண்ணீரை நாளைய தினம் மேட்டூர் அணையிலிருந்து நான் திறந்து வைப்பதற்கு முன்னால், இன்று மேற்கு மண்டல வேளாண் பெருங்குடி மக்களான உங்களை சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்!

வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நிகழ்ச்சியை வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில், ஈரோட்டில் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள்! அதற்காக முதலில் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**வேளாண் பெருமக்களுக்கு நன்றியும் – வணக்கமும்!**

இந்த பிரமாண்ட கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டபோது, என் மனதில் அளவில்லா மகிழ்ச்சி உண்டானது! அதற்காக, வேளாண் பெருமக்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

விவசாயிகளால்தான் இந்த மண்ணும், மக்களும் மகிழ்ச்சியோடு, மனநிறைவோடு உணவுப் பொருள்கள் கிடைத்து உடல் வலிமையோடு வாழ்கிறார்கள். “தமிழ்நாட்டின் வேளாண் பெருமக்கள் எல்லோரும் வாழ்வாங்கு வாழ்க” என்று இந்த ஈரோடு மண்ணிலிருந்து ஈர உணர்வோடு நான் வாழ்த்துகிறேன்.

**துறையை பொறுப்போடு நடத்தும் வேங்கையின் மைந்தன் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்!**

இந்தத் துறையை ஒரு விவசாயிக்கே உரிய அக்கறையோடும், பொறுப்போடும் நடத்திக்கொண்டு வருகிறார் யார்? வேங்கையின் மைந்தன் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள்!



இந்த கண்காட்சி கருத்தரங்கம் நடத்துவதற்கு இந்த ஈரோடு மாவட்டத்தை ஏன் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்று பார்த்தால், ஈரோடு வேளாண்மையில் வளர்ச்சி பெற்ற பல முன்னோடி விவசாயிகளைக் கொண்ட மாவட்டம்! இந்த மாவட்டம்! குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், மாவட்ட மொத்த வேளாண் உற்பத்தியில் 12 ஆயிரத்து 21 கோடி ரூபாய் என்ற அளவில் மாநிலத்தில் எட்டாவது இடம்! காளிங்கராயன் மற்றும் கீழ்பவானி என்று முக்கிய பாசன கால்வாய்கள் இருக்கிறது! இந்தியாவின் ‘மஞ்சள் மாநகரம்’ இந்த ஈரோடு! அதனால், இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்து சரியான முடிவு எடுத்திருக்கிறார்கள்!

ஆட்சிப் பொறுப்பேற்றதும், முதல் வேலையாக வேளாண்மைத் துறை என்று சொல்லாமல், உழவர் நலனையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்று, ‘வேளாண்மை – உழவர் நலத் துறை’ என்று பெயரை மாற்றினோம்! அந்த மாற்றத்திற்கேற்ப உழவர் நலன் காக்கும் பல்வேறு திட்டங்களையும் வகுத்து செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்! அதனால்தான், தமிழ்நாட்டு வரலாற்றில், முதல்முறையாக வேளாண் துறைக்கு என்று தனி நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்ய ஆரம்பித்தோம்! அப்படி ஐந்து வேளாண்மைத் துறை பட்ஜெட் மூலமாக தனிக் கவனம் செலுத்தியதால் உண்டாகி இருக்கக்கூடிய பயன்களை சில எடுத்துக்காட்டுகளை சொல்ல வேண்டும் என்றால்,

> **“இப்படியான பயனுள்ள நிகழ்வுகள் அனைத்து மண்டலங்களிலும் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்று வேளாண்மை உழவர் நலத் துறையை நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்! அதேபோல், விவசாயிகளும், பொதுமக்களும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்!”**

**உணவு தானிய உற்பத்தியில் 458 மெட்ரிக் டன் எட்டியுள்ளோம்!**

- கடந்த 4 ஆண்டுகளில், உணவு தானிய உற்பத்தியில் 458 இலட்சம் மெட்ரிக் டன் எட்டியிருக்கிறோம்!
- 2020-21ஆம் ஆண்டில், ஹெக்டேருக்கு 2 ஆயிரத்து 235 கிலோவாக இருந்த உணவு தானிய பயிர்களின் உற்பத்தித் திறன் 2024 - 25ஆம் ஆண்டில், 2 ஆயிரத்து 871 கிலோவாக அதிகரித்திருக்கிறது.
- அதுமட்டுமல்ல, கூட்டுறவுத்துறை மூலம் 62 ஆயிரத்து 352 கோடி ரூபாய் பயிர்க்கடன் மற்றும் கால்நடை பராமரிப்புக் கடனாக 81 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.
- சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு 26 இலட்சம் விவசாயிகள் பயன் பெற்றிருக்கிறார்கள்.
- தமிழ்நாடு முழுவதும் 2 இலட்சம் இலவச வேளாண் மின் இணைப்புகள் வழங்க அறிவிக்கப்பட்டு, இதுவரை 1 இலட்சத்து 84 ஆயிரம் இணைப்புகள் 2 ஆயிரத்து 184 கோடி ரூபாய் செலவில் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன். இலவச மின்சாரத்திற்கு மட்டும் இதுவரை மொத்தம் 26 ஆயிரத்து 223 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது.
- ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலையை விட கூடுதலாக, சன்ன ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு 105 ரூபாயும், பிற இரகங்களுக்கு 130 ரூபாயும் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

**கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகை!**

- கரும்பு விவசாயிகளின் நலன் கருதி, ஒன்றிய அரசு அறிவித்த ஆதார விலையான ஒரு டன்னுக்கு 3 ஆயிரத்து 151 ரூபாய்க்கு மேல், 349 ரூபாய் சிறப்பு ஊக்கத்தொகையாக வழங்குகிறோம். இப்படி விவசாயிகளுக்கு பார்த்துப் பார்த்து செய்வதால்தான், வேளாண்மையும் பெருகியிருக்கிறது! உழவர்களும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்! இருக்கிறீர்களா! இல்லையா! சொல்லுங்கள்...
- அகில இந்திய அளவில் பயிர் உற்பத்தித் திறனில், தமிழ்நாடு பெற்றுள்ள இடங்களை சொல்ல வேண்டும் என்றால்.
- சிறுதானியங்கள், கேழ்வரகு, எள் மற்றும் துவரையில் முதலிடம்!
- மக்காச்சோளம், மொத்த எண்ணெய் வித்துக்கள் மற்றும் கரும்பில் இரண்டாவது இடம்!
- குறு தானியங்கள் மற்றும் நிலக்கடலையில் மூன்றாம் இடம்! இப்படி வளர்ச்சியை அதிகரிக்க வேண்டும் என்றுதான் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்தினோம்! நகரங்கள் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒவ்வொரு கிராமமும் அதற்கு இணையாக வளர்ச்சி அடைய வேண்டும் என்று அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்துடன் இணைத்து மொத்தம் இருக்கும் 12 ஆயிரத்து 525 கிராம ஊராட்சிகளிலும் இதில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தோளில் பச்சைத் துண்டை போட்டு வேஷம் போடுபவர்கள் நாங்களல்ல!**

- “மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்” என்ற திட்டத்தை கடந்த ஆண்டு செயல்படுத்தினோம். தானியங்கள், காய்கறிகள், பழங்கள் விளைவிப்பதை ஊக்கப்படுத்தும் இந்த திட்டத்தில் 20 இலட்சம் விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, தோளில் துண்டு போட்டுக்கொண்டு வேஷம் போடும் போலி விவசாயிகள் நாங்கள் கிடையாது... உங்களுக்கு ஒரு பிரச்சினை வந்தால், முதல் ஆளாக துணை நிற்பவர்கள் நாங்கள்!
- கடந்த 4 ஆண்டுகளில், 21 இலட்சம் விவசாயிகளுக்கு ஆயிரத்து 630 கோடி ரூபாய் நிவாரணமாக வழங்கியிருக்கிறோம்! பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தில் 32 இலட்சம் விவசாயிகளுக்கு 5 ஆயிரத்து 720 கோடி ரூபாயை இழப்பீட்டுத் தொகையாக வழங்கியிருக்கிறோம். அதுமட்டுமல்ல, ஏராளமான சிறப்புத் திட்டங்களையும் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம். அதையெல்லாம் சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால்..
- மதுரை மல்லிகைக்கான இயக்கம்
- பலா இயக்கம்
- முருங்கை இயக்கம்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

---

# இந்திய நாட்டின் மின்னணு சாதனங்களின் உற்பத்தி மையமாக தமிழ்நாடு திகழ்கிறது!

## ஒன்றிய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தகவல்!

*சென்னை, ஜுன் 12 -*

*தமிழ் மொழிக்காக பிரத்யேகமாக செயற்கை நுண்ணறிவு பணிகளை உருவாக்க, தமிழ் ஏ.ஐ. எனும் திட்டம் தொடங்கப்பட உள்ளது. இதற்காக சென்னை ஐ.ஐ.டி. ஆராய்ச்சி பூங்கா மற்றும் டெபோ டெக் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் இணைந்து ஆராய்ச்சி மேற்கொள்ள உள்ளது.*

*அதன்படி தமிழ் செயற்கை நுண்ணறிவு திட்டத்தின் தொடக்க விழா சென்னை ஐ.ஐ.டி. ஆராய்ச்சி பூங்கா வளாகத்தில் நடைபெற்றது.*

*இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய ரயில்வே மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், காணொலி காட்சி வாயிலாக பங்கேற்று பேசினார்.*

*அபோது பேசிய அவர், இந்திய மொழிகள், குறிப்பாக தமிழ்மொழி ஏ.ஐ. துறையில் ஒருங்கிணைக்கப்படுவதில் இத்திட்டம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என தெரிவித்தார்.*

*உலகின் பழமையான மொழிகளில் ஒன்றான தமிழ், ஏ.ஐ. தொழில்நுட்பத்துடன் இணைவது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாகும் என தெரிவித்த ஒன்றிய அமைச்சர், தமிழ் ஏ.ஐ. 11 மாதங்களில் செயலியாக வரும் என்றும், அடுத்தாண்டு ChatGBT போன்று அனைத்து தகவல்களையும் வழங்கும் முகமையாக செயல்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.*

*இந்த ஏ.ஐ. தொழில்நுட்பத்தை ரயில்வே துறையிலும் பயன்படுத்தலாம் என தெரிவித்த அவர், தமிழ்நாடு மின்னணு உற்பத்தியின் மையமாக செயல்படுவதாகவும், தற்போது செல்போன், லேப்டாப் போன்ற மின்னணு சாதனங்கள் உற்பத்தியில் முன்னிலை வகித்து வருவதாகவும் தெரிவித்தார்.*

*ஏற்கெனவே வந்தே பாரத் ரயில் உற்பத்தி மையமாக தமிழ்நாடு திகழ்வதாகவும், விரைவில் ரயில் வீல் உற்பத்தி தொழிற்சாலை சென்னை அருகே வரவுள்ளதாகவும் தெரிவித்தார்.*

*ரயில்வே துறையிலும் தமிழ்நாடு முதன்மையாக இருக்கும் என ஒன்றிய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தனது உரையின்போது தெரிவித்தார்.*

*இந்நிகழ்வில் மலேசியா நாட்டின் தேசிய ஒற்றுமை துணை அமைச்சர் சரஸ்வதி கந்தசாமி, சென்னை ஐ.ஐ.டி. இயக்குநர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.*

---

## வணிக வளாகத்துடன் அமைகிறது!

# வடபழனி பணிமனையில் ஒருங்கிணைந்த பேருந்து முனையம்!

## வளர்ச்சி திட்டத்துக்கான ஒப்பந்தம் வெளியீடு!

*சென்னை, ஜுன் 12 -*

*ஒருங்கிணைந்த பேருந்து முனையம் மற்றும் வணிக வளாகத்துடன் கூடிய வடபழனி பணிமனை வளர்ச்சி திட்டத்துக்கான ஒப்பந்தம் வெளியிடப்பட்டுள்ளது.*

*சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனம் சார்பில், வடபழனியை மாற்றியமைக்கும் வகையில் ஒருங்கிணைந்த பேருந்து முனையம் மற்றும் வணிக வளாகத்துடன் கூடிய பல்நோக்கு போக்குவரத்து மையம், வடபழனி பேருந்து பணிமனையில் அமைக்கப்பட உள்ளது.*

*5 ஏறும் இடங்கள், 2 இறங்கும் இடங்கள் அடங்கிய நவீன பேருந்து நிலையம், பயணிகளுக்கான வசதிகள் மற்றும் நுழைவு வாயில்கள் அமைக்கப்படுகின்றன.*

*ஒரு லட்சத்து 6 ஆயிரத்து 762 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டுமானம் நடைபெறவுள்ளது. ஆயிரத்து 475 இருசக்கர வாகனங்கள் மற்றும் 214 நான்கு சக்கர வாகனங்களுக்கான வாகன நிறுத்துமிட வசதிகள் வழங்கப்பட உள்ளன.*

*முதல் தளத்திலிருந்து பத்தாவது தளங்கள் வரை அலுவலக இடங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.*

*இதில் கார்ப்பரேட் அலுவலகங்கள், வரவேற்பு ஓய்வறைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கான பிரத்யேக இடங்கள் அமைய உள்ளன.*

*இந்த திட்டம், அதிக தேவை கொண்ட நகர்ப்புற மையத்தை உலகத்தரம் வாய்ந்த, பல்நோக்கு வசதியாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*